# காரைநகரில் வடபகுதி இராணுவ அதிகாரி காயம்!


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 | பங்குனி 25 | றமழான் 22 | இதழ்: 57

யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 08-04-1991


## அரசு அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும், அரசபடையினருக்குமிடையே நேற்று ஏற்பட்ட மோதலில் வடபகுதி இராணுவப் பொறுப்பாளர் பிரிகேடியர் விஜயவிமலரத்ன காலில் காயமடைந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

காரைநகர் முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட படையினரை நோக்கி விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே பிரிகேடியர் காயமடைந்துள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க)

## பொன்னாலை பாலத்தில் குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

பொன்னாலைப் பாலத்தில் நேற்றுக் காலை பொம்மர், அவ்ரோ தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதில் ஒரு பாலம் பலத்த சேதமடைந்தது.

நேற்றுக் காலை இப்பாலத்தை நோக்கி எட்டுத் தட

[4-ம் பக்கம் பார்க்க]

# ஆனையிறவு முகாமை விரைவில் புலிகள் கைப்பற்றிக்கொள்வர்

## பி. பி. ஸி. தகவல்

(லண்டன்)

யாழ். குடாநாட்டிலுள்ள ஆனையிறவு ராணுவ முகாமை விடுதலைப் புலிகள் எந்நேரத்திலும் தம் வசப்படுத்திக் கொள்ளலாம்.

இலங்கை விவகாரம் குறித்து பி. பி. ஸியின் கொழும்பு முகவர் கிறிஸ்தோபர் மொறிஸ் அனுப்பிய செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

பி பி. ஸியின் சந்தேசய சிங்களச் சேவையில் நேற்று இது ஒலிபரப்பாகியது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(4-ம் பக்கம் பார்க்க)

## அம்பாறை இராணுவ முகாம்கள் தாக்கப்பட்டன

[மட்டுநகர்]

அம்பாறை மாவட்டத்தில் பல இராணுவ முகாம்கள்மீது விடுதலைப் புலிகள் நேற்றுத் திடீர்த் தாக்குதல்களை மேற்கொண்டதில் இராணுவத் தரப்பில் பலத்த சேதங்கள்

[4-ம் பக்கம் பார்க்க]

## மன்னாரில் மூன்று தமிழர் வெட்டிக் கொலை

(மன்னார்)

மன்னார் பகுதியிலுள்ள நானாட்டான், கொவ்வம் குளம், நறுவலிக்குளம், அச்சன்குளம் ஆகிய இடங்களில் இராணுவத்தினர், தமிழ் மக்களை வெட்டிக்கொலை செய்

(4-ம் பக்கம் பார்க்க)

## வெடிக்காத குண்டை பரீட்சித்த இளைஞர் படுகாயம்

[பருத்தித்துறை]

ஸ்ரீலங்கா கடற்படையினரினால் ஏவிவிடப்பட்டு வெடிக்காமல் விழுந்து கிடந்த பீரங்கிக் குண்டொன்றை எடுத்து வெடிக்கவைத்த இரு இளைஞர்கள் பலத்த காயங்களுக்குள்ளாகி பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு குடத்தனை பொற்பதிக் கிராமத்திலேயே இவ்விபத்து நிகழ்ந்

(4-ம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் நள்ளிரவிலும் கடும் விமானத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் விமானத் தாக்குதல், நேற்று முன்தினம் இரவும், நேற்றுக் காலையும் மிக மோசமாக இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு சுமார் 12-30 மணியளவில் 2 பொம்மர்கள், 2 அவ்ரோக்கள், 2 ஹெலிகள் கடும் தாக்குதலை அதிகாலை 2-00 மணி வரை மேற்கொண்டன.

இத்தாக்குதலில் 15க்கும் மேற்பட்ட வீடுகளும், 4கடைகளும் பலத்த சேதமடைந்தன. காரைநகர் வீதிகள் முழுவதும் கலிபர் தாக்குதலினால் சேதமடைந்துள்ளன.

குடிமனைகள் மீது இலக்கின்றி மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் வலந்தலையில் 4 வீடுகளும், 3 கடைகளும்,

(4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பு சென்ற லொறிகள் இடைவழியில் நிற்கின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயம், புகையிலை, மிளகாய் மற்றும் பொருட்களை ஏற்றிக் கொண்டு கொழும்பு நோக்கிச் சென்ற லொறிகள் ஓமந்தை, கனகராயன் குளம் போன்ற பகுதிகளில் தரித்து நிற்பதாக நேற்றுக் காலை கொழும்பிலிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

சுமார் ஐம்பதிற்கும் அதிகமான லொறிகள் இவ்வாறு தரிந்து நிற்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த லொறிகளில் ஏற்றிச் செல்லப்பட்ட வெங்காயம் பழுதடைந்த நிலையில் வீதிகளில் வீசப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

## 500 ஏக்கர் விவசாயம் பலாலிப் பகுதியில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலிப் பகுதியில் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கையினால் 500 ஏக்கர் நிலத்தில் விவசாயச் செய்கை பாதிப்படைந்துள்ளது.

இப்பகுதியில் இருந்து 2,050 குடும்பங்கள் இடம்பெயர்ந்து, குடாநாட்டின் பல பகுதிகளிலும் தொழில் இழந்த நிலையில் இருப்பதாகப் பலாலி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் செயலாளர் இ. ரவிவர்மன் தெரிவித்தார்.

இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் 500 குடும்பங்கள் மட்டும் அகதி முகாம்களில் இருப்பதாகவும் ஏனைய 1,550 குடும்பங்களும் தனி

[4-ம் பக்கம் பார்க்க]

## கேரதீவு மீண்டும் தாக்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]

ஸ்ரீலங்கா அரசுக்கு சொந்தமான இருபொம்மர் விமானங்கள் நேற்று கேரதீவுப் பகுதியில் மேற்கொண்ட தாக்குதலில் சங்குப்பிட்டி கேரதீவுப் பாதைமுற்றாக சேதமடைந்துள்ளது.

இரண்டு தடவைகள் மாறி மாறி மேற்கொள்ளப்பட்ட இவ்விமானத் தாக்குதலைத்

(4-ம் பக்கம் பார்க்க)

## மாவீரர் பூஜை நடத்தும் ஒரு வீரத்தாய்!

(யாழ்ப்பாணம்)

கைதடி நுணாவில் வைரவர் கோவிலடியிலிருக்கும் மாவீரர் நினைவாலயத்திற்கு இறந்த போராளியின் அன்னை ஒருவரால் தினமும் பூஜை செய்யப்பட்டு வருகிறது.

சிறிலங்கா இராணுவத்துடனான மோதலின்போது வீரமரணமடைந்த இப்பகுதியைச் சேர்ந்த நான்கு போராளிகள் உருவப்படங்களைக் கொண்ட நினைவாலயம் கடந்த மாவீரர் தினத்தின்போது கைதடி நுணாவில் சிற்றூரவையினால் அமைக்கப்பட்டது.

(4ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்களை நியமிப்பதற்கு மாகாண சபைகளுக்கு அதிகாரம் இல்லை!

- ஜனாதிபதி

(அநுராதபுரம்)

"ஆசிரியர்களை நியமிப்பதற்கு மாகாண சபைகளுக்கு எதிவித அதிகாரமும் வழங்கப்படவில்லை."

இவ்வாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்று அநுராதபுரத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் கூறினார்.

ஜனாதிபதி இதுபற்றி மேலும் கூறியதாவது:-

"ஆசிரியர்களின் நியமனங்

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## நாவல்கள் (இலவசம்)

வித்தியாசமான கதைகளில் கருத்தில் சிறந்த நாவல்கள் - மீரா வெளியீடுகள். 140/- ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/- ரூபாவுக்கான புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னுகம். திருக்கணிதம், சாவகச்சேரி. யாழ்ப்பாணத்தில் மீரா வெளியீடுகளை விற்பனை செய்யும் புத்தகசாலைகளில் பெறலாம். (சி-4521)

## பாலாஜீ புத்தகசாலை

செங்கை ஆழியானின் யாககுண்டம், ஆறுகால் மடம், கந்தவேள் கோட்டம் மற்றும் புவியியல், வரலாறு முதலிய புத்தகங்கள் விற்பனைக்குண்டு. (புத்தாண்டை முன்னிட்டு விசேட தள்ளுபடி) 15/6, முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-4614)

## தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள விற்பனை நிலையம் ஒன்றிற்கு 30 வயதிற்கும் 50 வயதிற்குட்பட்ட கணக்கியல் இலிகிதர் (Accounts Clerk) தேவை. விண்ணப்பதாரர் ஆங்கிலத்தில் கடிதத் தொடர்பு கொள்ளக்கூடியவராகவும், தட்டச்சு தெரிந்தவராகவும் (Letters Corresponding and Type-writing) இருத்தல் வேண்டும். முன் அனுபவ தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 1214, மே/பா ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். [எ-1214]

## பங்குனி உத்தரம்

(பருத்தித்துறை)

இலங்கையின் இரண்டாவது கதிர்காமமெனப் போற்றப்படும் தென்புலோலி தான்தோன்றி உபயகதிர்காமக் கந்தன் ஆலயத்தில் பங்குனி உத்தரத் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது (52)

## பவளவிழா அதிர்ஷ்டலாபச்சீட்டு

10 06-90 ல் நடைபெற்ற சீட்டிழுப்பு தொடர்பான அறிவித்தல்

இதுவரை கோரப்படாத பரிசுகள் 11-04-91 புதன்கிழமை மு. ப. 9.00 - 11-00 மணிக்கிடையில் கல்லூரி அலுவலகத்தில் வழங்கப்படும்.

கோரப்படாத பரிசு விடயங்களை கல்லூரியில் பார்வையிடலாம்.

கோரப்படாத பரிசுகள்:

(1) துவிச்சக்கரவண்டி (1)

(2) மூன்றுபற்றி ரோச் (22)

கோரப்படாத பரிசுகள் 11-04-91 மு. ப. 11.30 மணியளவில் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

பழைய மாணவர் சங்கம்

யா/வைத்தீஸ்வரா வித்தியாலயம்

(சி 4623) யாழ்ப்பாணம்

## காணவில்லை



### சுப்பிரமணியம் சுந்தரமூர்த்தி

சுப்பிரமணியம் சுந்தரமூர்த்தி என்பவர் கடந்த மாசி மாதம் இருபத்தி நான்காம் திகதி ஞாயிறு அதிகாலை 4-30 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து காணமற் போய்விட்டார். அவர் ஒரு மனநோயாளி. காணமற் போனசமயம் அவர் பச்சை பூவாளி சாரமும் நீலக்கோடன் சேட்டும் அணிந்திருந்தார். வயது 41. அவர் புலோலி பிரதேசசபையில் தொழில் நுட்ப உத்தியோகஸ்தராக கடமையாற்றுபவர். அவருக்கு மூன்று இளம் பிள்ளைகள் மனைவியாகிய நானும் எனது மூன்று பிள்ளைகளும் அவரின் பிரிவை எண்ணி ஏங்கித் தவித்தபடி இருக்கிறோம். தயவுசெய்து அவரைக் கண்டவர்கள் யாராயினும் கீழ்குறிப்பிட்ட விலாச வீட்டிற்கு அறிவித்தல் தரவும். அல்லது கொண்டு வந்து விடவும். அறிவித்தல் தருபவர்களுக்கு அதற்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல் தருபவர்:

திருமதி சு. சாந்தினிதேவி

பாட்டா கொம்பனி இல்லம்,
தும்பளை ரோட்,
பருத்தித்துறை.

(சி-4622)

## இடமாற்றம்

[கொழும்புத்துறை]

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம் புலோலி புற்றளை மகாவித்தியாலய கட்டடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. (154)

## சைக்கிள் பாதுகாப்பு நிலையம்

[புலோலி]

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை, வைத்தியசாலைக்குமுன்பாக சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. (61)

## முதலுதவிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சென். ஜோன் அம்புலன்ஸ் படையினர் யாழ்ப்பாணம் கோட்டத்திற்குட்பட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியினை இன்று 8-ம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பிக்கவிருக்கின்றனர்.

## பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்)

வண்ணை நீராவியடி கடையிற்சுவாமிகள் சமாதி சிவாலய தேவஸ்தான வழிபடுவோர், உபயகாரரர் வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் இம்மாதம் 10-ம்திகதி செவ்வாய்க்கிழமை சிவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஏ)

## விசேட பூசைகள்

(பருத்தித்துறை)

இலங்கை சைவமன்றம் சந்தான குரவர் உமாபதி சிவாச்சாரியார் குருபூசையை இம்மாதம் 26-ம் திகதி புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்தில் நடாத்தவுள்ளது. அன்றைய தினம் ஆலயத்தில் விசேட பூசைகள் நடைபெறும். (52)

## இராசி பலன்

08-04-1991

திங்கட்கிழமை

நவமி பி. இ. 1. 41 வரை, மூ. இ. 8. 08 வரை மரண யோகம். இராகுகாலம் காலை 7. 07 வரை, சுபநேரம் பகல் 12. 07 முதல் 1. 37 வரை.

மேடம்: அதிகபிரயாசை, தொழில் சிறப்பு, பணவரவு, முயற்சி.

இடபம்: ஏமாற்றம், தொழில் அலைச்சல், தப்பபிப்பிராயம்.

மிதுனம்; கைப்பொருள் நழுவல், குடும்பகலவரம், மன அமைதி குன்றல்.

கடகம்: தொழில் லாபம், உறவினர் உதவி, வைத்திய செலவு.

சிங்கம்: பதவி மாற்றம் தொழில் சிறப்பு, ஞானிகள் ஆசி, புகழ்.

கன்னி: எதிர்பாராத துன்பம், வருவாய் குன்றுதல், குடும்பத்தில் பிரச்சனை,

துலாம்: பணத்தகராறு, தொழில் நஷ்டம், குடும்ப பிரிவு.

விருச்சிகம்; புதிய சிந்தனை, தொழில் லாபம், பயணங்களால் அனுகூலம்,

தனுசு: மன நிலை பாதிப்பு, உடல் சோர்வு, குடும்பத்தில் செலவு,

மகரம்: பணவரவு, அந்நியர் உதவி, தெய்வீக தரிசனம், மகிழ்ச்சி,

கும்பம்: விரக்தி நிலை, தொழில் வசதி, சகோதரர் பகை, குடும்பபிரிவு

மீனம்: தொழில் சிறப்பு, மனப்போராட்டம், குடும்பத்தில் சுபகாரியம்.

— ஜோஸ்யர்

# ஆசிரியர் கற்பிக்கக்கூடிய சூழலை உருவாக்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

''ஆசிரியர்கள் எல்லோரும் நல்லவர்களே. அவர்கள் கற்பித்தல் தொழிலை நன்கு ஆற்றக்கூடிய சூழ்நிலையை அதிபர்கள் உருவாக்க வேண்டும். மாணவர்களை எவ்வாறு அன்புடன் நடத்துகின்றோமோ இவ்வாறே ஆசிரியர்களையும் அன்புடனும் பண்புடனும் நடத்தவேண்டும்.''

இவ்வாறு மானிப்பாய் மகளிர் கல்லூரிஅதிபராகவிருந்து யாழ். கோட்டக்கல்வி அலுவலக கல்வி அதிகாரியாகப் பதவியுயர்வு பெற்றுச்சென்ற திருமதி சரோஜினி கல்யாணசுந்தரேசன் தமக்களிக்கப்பட்ட பிரியுபசாரவிருந்தின் போது குறிப்பிட்டார்.

இவ்வைபவத்துக்கு கல்லூரிப் பதில்அதிபர் திருமதி வை. தியாகராசா தலைமை வகித்தார்.

ஆசிரியர்கள் திருவாளர்கள் அமுதலிங்கம் யோகேஸ்வரன், இராமாநந்தம், திருமதிகள்: ஞானப்பிரகாசம், சுகந்தசீலன் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

# கடந்த ஏழு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை

[கொழும்புத்துறை]

யாழ். கைதடி ஆயுள்வேத போதனு வைத்தியசாலையில் கடமையாற்றும் சகலதர ஊழியர்களுக்கும் கடந்த 7 மாத காலமாக வேதனம் எதுவும் கொழும்புத் தலைமை அலுவலகத்தில் இருந்து இதுவரை வழங்கப்படவில்லை.

இவ்வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சைபெற்று வருபவர்களும், வெளிநோயாளர்களும் நீண்டகாலமாக போதியளவு மருந்துவகைகள் இன்மையால் பலத்த சிரமத்துக்கு ஆளாகவேண்டியுள்ளது.

இவ்வைத்தியசாலையில் நிலவும் ஊழியர் பற்றுக்குறை உட்பட சகல குறைபாடுகளையும் நிவர்த்தி செய்யும் நோக்குடன் கடந்த வாரம் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி ம. தவத்துரை. லிகிதர் திரு, கே.செல்லத்துரை ஆகியோர் கொழும்பு ஆயுள்வேத போதனு வைத்தியசாலைத் தலைமை அலுவலகத்திற்குச் சென்றுள்ளனர். (154)

# பருத்தித்துறையில் சுகாதார வாரம்

[பருத்தித்துறை]

பருத்தித்துறை நகரசபையின் சுகாதாரவாரம் கடந்த 5-ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பித்துள்ளது.

இச்சுகாதாரவாரம் இரண்டு வாரங்களுக்கு நகரசபையால் அனுஷ்டிக்கப்படவுள்ளது, இச்சுகாதார வாரத்தின்போது பருத்தித்துறை நகரப்பகுதிகளின் சுத்த,சுகாதார நடவடிக்கைகள் சிரமதான முறையில் பேணப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பொதுக் கிணறுகளைச் சுத்தம்செய்தல், கிணறுகளுக்கு குளோரின் போடுதல், கட்டாக்காலி நாய்களை ஒழித்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்மாதம் 15-ம் திகதி பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் உள்ள சனசமூக நிலையங்கள். பொது ஸ்தாபனங்களின் உறுப்பினர்கள், அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து பாரிய சிரமதான நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

இச்சுகாதார வாரத்திற்கான சகல நடவடிக்கைகளையும் பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் திரு. கே. சண்முகநாதன் மேற்கொண்டு வருகிறார். (52)

# சுகாதார பரிசோதகர்கள் மீள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள பொது சுகாதாரப் பரிசோதகர் பற்றுக்குறையை நீக்குமுகமாக அண்மையில் சுயவிருப்பத்தின் கீழ் இளைப்பாறிய 10 சுகாதாரப் பரிசோதகர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிர்வாகத்தின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு மத்திய மருந்தகங்களுக்கும் தேவையான இரண்டாம் தவணைக்குரிய மருந்துகள் லங்காஶ்ரீ' கப்பல் மூலம் கொண்டுவரப்படவிருக்கிறது (152)

# முறைசாராக்கல்வி உப வளநிலையம்

(உடுவில்)

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள முறைசாராக்கல்விப் பிரிவின் உபவள நிலையம் தினமும் காலை 8 மணியில் இருந்து மாலை 6 மணி வரை திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்றும், எவரும் இந்நிலையத்தில் வந்து நிலையத்தின் பணியினைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் முறைசாராக் கல்விப்பிரிவுப் பொறுப்பதிகாரி திரு எஸ். சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும்கூறியதாவது: கல்விவளநிலையச் சேவை பன்முகப்படுத்தப்பட்டு ஒவ்வொரு கோட்டத்திலும் உபவளநிலையங்களைத்திறந்து வருகிறோம். எமது பிரதேசத்தின் வளங்களைக் கொண்டு புதிய புதியதயாரிப்புகளையும், கண்டுபிடிப்புக்களையும் ஏற்படுத்தி மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு பணியாற்றுகின்றோம். கல்வி வழிகாட்டல் பிரதேச தொழில் வள விருத்திக்கான நூலக சேவை நடத்துதல், மூலவளங்களின் உச்சப்பயன்பாட்டை பெறும் வகையில் சிறுதொழில்பயிற்சி அளித்தல், உள்ளூர் மூலப் பொருள் உற்பத்திகளை சந்தைபடுத்த வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவற்றில் எமக்கு உபவள நிலையம் வேண்டிய உதவிகளைச் செய்ய உள்ளது

## விஞ்ஞான சங்கத்தின்
# இலட்சனை உருவாக்க பொதுமக்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் ஒரு இலச்சினையை உருவாக்க விரும்புகிறது.

விஞ்ஞான சிந்தனையையும் ஆராய்ச்சியையும் உயர்த்து முகமாகவும் அத்துடன் தூய பிரயோக விஞ்ஞானங்கள், மருத்துவ விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் ஆகியவற்றையும் இது உள்ளடக்கி இயங்கும். மேற்படி இலச்சனைக்கான ஆலோசனைகள் மாதிரி வடிவமாக பொதுமக்களிடமிருந்து யாழ்: விஞ்ஞானச் சங்கத்தால் கோரப்பட்டுள்ளது.

இலச்சனை ஆலோசனைகள் சம்பந்தமாக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர் சி. சிவஞானசுந்தரத்துடன் இம்மாதம் 15ம் திகதிக்கு முன்பாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. [மா]

# தமிழீழ விடுதலைப் புலிகள் எமது கலங்கரை விளக்கம்
## — விடுதலையானோர் கருத்து

(நமது நிருபர் தேவா)

''தவறான வழிநடத்தலினால் பாதை தவறிச்சென்ற எமக்கு நல்ல கலங்கரை விளக்கமாக இருந்து வழி காட்டியவர்கள் விடுதலைப் புலிகள் எமது தேசத்தையும் இனத்தையும் காக்கின்ற பலம் ஆற்றல் அவர்களிடம் தான் இருக்கிறது எனவே விடுதலைபபுலிகளின் தலைமையில் ஓரணியில் நின்று எமது மண்ணைமீட்க போராடுவோம். இவ்வாறு நேற்று முன்தினம் புலிகளினால் விடுதலை செய்யப்பட்ட இளைஞர்கள் தெரிவித்தனர்.

இந்த இளைஞர்களுடன் நமது நிருபர் உரையாடிய போது அவர்கள்கூறியதாவது:

''நாம் இன்று உத்தியோக பூர்வமாக விடுதலை செய்யப்பட்டுள்ளோம், ஆனால் இதற்கு முன்பே நாம் அடிக்கடி பல தடவைகள் எமது வீடுகளுக்குச் சென்று வந்துள்ளோம். விடுதலைப்புலிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக கடந்த 17மாதங்களாக நடந்ததினால் எமக்கு இச்சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது.''

''எமது நிலையை நன்கு உணர்ந்து விட்டோம். தமிழினத்தின் விடுதலைக்காக நாம் விடுதலைப்புலிகளுடன் இணைந்து எமது முழுமையான பங்களிப்பை வழங்கப் போகின்றோம்''

''விடுதலைப் புலிகளுடன் நாம் இருந்த காலங்களில் அவர்கள் எம்மைசிறந்தமுறையில் பராமரித்தார்கள். நீங்கள் எமக்குஎதிரிகள் அல்ல. நீங்களும் தமிழர் தான்' உங்களை நாம்சீர் திருத்த முனைகின்றோமே ஒழிய அழிக்க முற்படவில்லை என்று எமக்கு பல நல்ல பயனுள்ள வழிகளை இக்காலங்களில் கற்றுத் தந்துள்ளார்கள்'' (வி)

## மீன் விலை வீழ்ச்சி

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் மரக்கறிகளின் விலைகள் வீழ்ச்சியடைந்ததையடுத்து மீனின் விலையும் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [52]

# ஊழியர் பிரச்சனைகளை தீர்க்க முயலுவோம்

(அல்லைப்பிட்டி)

''ஊழியர்களின் எதிர்கால நலன் கருதி ஆரம்பிக்கப்பட்ட வர்த்தக ஊழியர் சங்கத்தில் ஊழியர்கள் அனைவரும் உறுப்பினர்களாகச் சேர்ந்து சங்கத்தை வளர்க்க ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.''

இவ்வாறு யாழ்: வர்த்தக ஊழியர் சங்கத்தின் புதிய அலுவலகத்தை யாழ். நகரில் திறந்துவைத்துப் பேசிய திரு இ. சுப்பையா தெரிவித்தார்.

சங்கப் பொதுச் செயலாளர் திரு. சி. குமாரலிங்கம் மங்கல விளக்கேற்றிவைத்தார்

திரு. சுப்பையா தொடர்ந்து பேசுகையில், நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக அநேக வர்த்தக ஊழியர்கள் கடந்த காலங்களில் பாதிப்படைந்துள்ளார்கள் என்றும், அவர்கள் தங்கள் நிலைப்பாடுகளை எமது சங்கத்திற்குத் தெரியப்படுத்தினால் சம்பந்தப்பட்டவர்களோடு தொடர்பு கொண்டு பிரச்சனைகளைச் சமாதானமாகத் தீர்க்க முயல்வோம்'' என்றார்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் கிளை தனது ஓராண்டு நிறைவை இன்று 8-ம் திகதி திங்கட்கிழமை வாடிக்கையாளர்களுடன் கொண்டாடுகிறது.

இவ் வங்கியின் ஒரு வருட கால சேவையில் 4000க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களை பெற்றதுடன் எதிர்பார்க்க இலக்கைவிட மிகக் கூடிய வைப்பையும் பெற்றுள்ளது.

0 0 0

(பருத்தித்துறை)

புலோலி மந்திகை கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்தக் குளிர்த்தி அபிஷேகமும், அன்னதானமும் இன்று 8ந் திகதி நடைபெறவுள்ளது. (52)

## கிரிக்கெட் தமிழக அணி வெற்றி
# சிறிகாந் - 141

(சென்னை)

தமிழக கிரிக்கெட் சடையின் வைர விழாவை முன்னிட்டு நேற்று இந்திய அணிக்கும், தமிழக அணிக்குமிடையில் நடைபெற்ற 45 ஓவர் கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி 35 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

தமிழக அணி 45 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 316 ஓட்டங்களை பெற்றது. சிறிகாந் மிக திறமையாக ஆடி 141 ஓட்டங்களை பெற்றார். ரவிசாஸ்திரியின் ஒரு ஓவரில் நான்கு சிக்ஸர் அடித்ததும் குறிப்பிடத்தக்கது. சிறிகாந்தும், சந்திரசேகரும் முதல் விக்கெட் ஜோடியாக 191 ஓட்டங்களை பெற்றனர்.

இந்திய அணி 43 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 280 ஓட்டங்களை பெற்றது. சித்து 80 ஓட்டங்களையும் ரெண்டுல்கர் 62 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய அணிக்கு கபில்தேவும் தமிழக அணிக்கு அஸாருதீனும் தலைமை தாங்கினார்கள். (சி)

# 3 மாத காலத்தில் கொழும்பு நகரில் 2,250 வாகன விபத்துக்கள்

[கொழும்பு]

கொழும்பு நகரில் கடந்த 3 மாதங்களில் 2,250 வாகன விபத்துக்கள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

இந்தக் காலப்பகுதிகளில் 33 பேர் விபத்துக்களின் காரணமாக இறந்துள்ளார்கள்.

இந்த விபத்துக்களில் 207 பேருக்கு மட்டும் காயமேற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டைவிட இவ்வாண்டு கொழும்பு நகரில் விபத்துக்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

# சனசமூக நிலையங்களின் நன்கொடைப்பணம்

[கொழும்புத்துறை]

சனசமூக நிலையங்களின் 1989, 1990ம் ஆண்டுகளுக்கான நன்கொடைப்பணம் சம்பந்தப்பட்ட சகல உள்ளுராட்சி மன்றங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது இந்நன்கொடையை 1989-ம் ஆண்டு வரை எவ்வித தஸ்தாவேஜுவும் பரிசீலனை செய்யாது கொடுக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது.

1990ம் ஆண்டுக்கான நன்கொடை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சிபார்சின்படி கொடுக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது. மே மாதம் 15-ம் திகதிக்குப்பின்னர் சனசமூக நிலையங்கள் தங்களுடைய நன்கொடைப்பணத்தை உடனடியாகப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றன. (154]

# நோயாளருக்கு உணவு வழங்கப்படவில்லை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் ஊழியர்களுக்கும், அங்கு கடமையில் ஈடுபட்டுவரும் நோயாளர்களுக்கும் உணவு வழங்கப்படுவதில்லையாம்.

இவ்வைத்தியசாலையில் கடந்த ஒருசில மாதங்களாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அங்கு உணவு வழங்குவதற்காக ஒப்பந்தக்காரரர் எவரும் முன்வர மறுத்துள்ளமையாலேயே இப்படியான அவதி நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (101)

## மகன் தாக்கி தந்தை காயம்

(யாழ்ப்பாணம்)

சித்தசுவாதீனமற்ற மகன் ஒருவர் தனது தந்தையை மண்வெட்டியால் தாக்கி காயப்படுத்தினர்,

கொக்குவில் ஸ்ரேசன் வீதியைச் சேர்ந்த கந்தையா நவரட்ணம் (65 வயது) என்ற வயோதிபரே இச் சம்பவத்தில் காயமடைந்தவராவார். (56)

## சுதேச வைத்திய சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கைதடி சித்த மருத்துவ பீடத்தில் அண்மையில் சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கம் அங்குரார்பணம் செய்யப்பட்டது.

இச் சங்கத்தின் நிர்வாகிகள் விபரம்:

தலைவர் சோ. சபாநாதன், உப தலைவர்; பே. பிலிப்ஸ், செயலாளர்; ஐ ஜெபநாம கணேசன், உப செயலானர்: ஆர். கனகலிங்கம், மற்றும் 12 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

## இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் புகையிரத நிலைய ஊழியர்களுக்கு கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து இடமாற்றம் புகையிரதப் பகுதியால் வழங்கப்பட்டிருந்ததை தொடர்ந்து அன்ரன் யோசவ், க. தங்கவேல் ஆகிய இரு ஊழியர்கள் மன்னம்பிட்டியா புகையிரத நிலையத்திற்கு சென்றுள்ளதாகத் தெரியவருகின்றது,

## அப்பியாசக் கொப்பிகள்

[உடுவில்]

பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கென 40,000 அப்பியாசக்கொப்பிகள் மருதனாமடம் கல்விக்கோட்டத்திற்குக் கிடைத்துள்ளது.

இக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு 80 பக்கம் கொண்ட அப்பியாசக் கொப்பி ஒன்று 7 ரூபா இருபத்தைந்து சதப்படி வழங்கப்படவுள்ளதாக அறியப்படுகிறது. (109)

## மருந்துகளின்றி
# இயங்காமலிருக்கும் தரிசிப்பு மருந்தகம்

[நாவற்குழி]

மறவன்புலோ, கோயிலாக்கண்டி, கைதடி, நாவற்குழி தெற்கு, தனங்களப்பு, அறுகுவெளி போன்ற கிராமங்களுக்கு மத்தியில் இயங்கிவந்த ஆரம்பசுகாதார நிலையத்தில் உள்ள தரிசிப்பு மருந்தகம் கடந்த ஆவணி மாதத்திற்குப் பின்னர் திறக்கப்படவில்லை.

சிகிச்சைக்குரிய மருந்துகளில்லாத காரணத்தினாலே இம்மருந்தகம் திறக்கப்படுவதில்லை என இதன் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்த மருந்தகம் இயங்கிய காலங்களில் 50-75 நோயாளர்களுக்கு மருந்து விநியோகம் நடைபெற்று வந்தது.

தற்போது இது இயங்காத நிலையில் இப்பகுதிமக்கள் சாவகச்சேரி வைத்தியசாலைக்கும், கைதடி அரசினர் மருந்தகத்திற்கும் கால்நடையாக செல்லும்பரிதாப நிலையிலுள்ளனர்.

இதேவேளை மட்டுவில் வேரக்கேணியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மருந்தகமும் கடந்த ஆடிமாதம் 31-ம் திகதியிலிருந்து மருந்தின்மையாலேயே பூட்டப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது [107]

## நியமனம்

(கொழும்புத்துறை)

மன்னார் மறுவரி நிலையப் பொறுப்பதிகாரி திரு செந்தூர்ச்செல்வன் அண்மையில் கொழும்பு மதுவரித் திணைக்கள ஆணையாளரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (154)

# நிர்ணய விலையிலும் குறைந்த விலைக்கு உணவுப்பொருள் விற்பனை

(புலோலி)

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அத்தியாவசிய உணவுப் பொருட்களை, நிர்ணய விலையிலும் பார்க்க மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்துவருகிறது.

இச்சங்கம், மக்கள் கடைகள் மூலம் அரிசி, மா, சீனி, புளி, பயறு, பாலுணவுகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை விற்பனைசெய்து வருகிறது. (61)

## கட்டடத் திருத்த வேலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் சேதமடைந்திருக்கும் நிருவாகப்பகுதியின் மேல்மாடிக்கட்டிடம் திருத்தியமைக்கப்படவிருக்கிறது.

இதற்கான நிதியும் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மேல்மாடி கட்டடம் முன்பு வைத்தியர் விடுதியாக இருந்தது குறிப்பிடத்தக்கது. (153]

## ஆண்டுவிழா போட்டிகள்

(புலோலி)

கற்கோவளம் சனசமூக நிலையத்தின் ஆண்டுவிழாவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே பல்வேறு போட்டிகளும் கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்படவுள்ளது

இவ் விழாவையொட்டி பாடசாலை மாணவர்களிடையே பேச்சு, கட்டுரைப் போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளில் பட்டிமன்றங்களும், நாடகங்களும் இடம்பெறவுள்ளன. [61]

## வைத்திய அதிகாரி

(பண்டத்தரிப்பு)

முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய டாக்டர் திருமதி எஸ். சுந்தரலிங்கம், இம்மாதம் தொடக்கம் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியாக இடமாற்றம் பெற்றுள்ளார். (72)

தமிழ்நாடு தென் ஆற்காடு

# பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது

# ஒருவர் பலி! நால்வர் காயம்!!

[சென்னை]

தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையத்தை இனந்தெரியாத கோஷ்டி நேற்று தாக்கியுள்ளது.

இத்தாக்குதலில் ஒரு பொலிஸ்காரர் ஸ்தலத்திலே பலியானார். உதவி பொலிஸ் பரிசோதகர் உட்பட மற்றும் 4 பொலிஸ்காரர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலைக் கேள்வியுற்று அதிர்ச்சியடைந்த பொலிஸ் அதிகாரிகள் அவ்விடத்துக்கு பெருமளவில் சென்றுள்ளனர். [பூ]

## வடக்கில் சீபிளேன்

[நமது நிருபர்]

யாழ். குடாநாட்டிலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் நேற்றுக் காலை முதல் மாலை வரை சீபிளேன் வட்டமிட்டுப் பறந்ததைக் காணமுடிந்தது;

சில இடங்களில் ஹெலி வேட்டுக்களையும் தீர்த்தது. [83!

## இந்தியா - இலங்கை உறவு அதிகாரிகள் சந்திப்பு

(புதுடில்லி)

இலங்கை-இந்திய உறவுகள் தொடர்பாகப் பொருளாதார வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் நோக்குடன் இரு நாட்டு அதிகாரிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளன.

இது தொடர்பான ஆலோசனைகளில் கலந்துகொள்வதற்கு இலங்கை வெளியுறவு அமைச்சின் செயலாளர் திரு. பெர்னுட் திலகரத்ன தலைமையில் உயர் மட்டத் தூதுக்குழு நேற்று இந்தியா சென்றுள்ளது.

இந்தியாவின் சார்பில் இந்தியவெளியுறவுத்துறை அமைச்சின் செயலாளர் திரு. முஜ்குந் துபே தலைமையில் உயர் மட்ட அதிகாரிகள் குழு ஒன்று இப்பேச்சுக்களில்கலந்து கொள்ள இருக்கிறது; (ரி)

### மாவீரர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாவீரர் நினைவாலயத்தில் குறிப்பிடப்பட்ட அன்னையின் மகனின் படமும் வைக்கப்பட்டுள்ளது.

நினைவாலயம் நிறுவப்பட்ட நாளிலிருந்து தினமும் காலையில் எழுந்து குளித்துதோய்த்துலர்ந்த ஆடையணிந்துவாளியில் தண்ணீரும், பூக்களும் எடுந்துவரும் இவர் நினைவாலயத்தினைக் கூட்டித் துப்பரவு செய்து, தண்ணீர் தெளித்து ஒவ்வொரு படத்திற்கும் மலர்கள் தூவி பூஜை செய்து கைகளைக் கூவித்து கண்ணீர் மல்க வழிபட்டு வருகிறார். (ரி)

### ஆனையிறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சிலநாட்களுக்குமுன் காரைநகர் கடற்படைமுகாம் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

மேற்படி முகாமைவிட ஊர்காவற்றுறையிலும், ஆனையிறவிலும் இராணுவ முகாம்கள் அமைந்துள்ளது. அத்துடன் பாலாலியிலும் இராணுவ முகாம் ஒன்று அமைந்துள்ளது.

இதைவிட ஏனைய பகுதிகள் அனைத்தும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

எனினும் இராணுவத்தின் வசமுள்ள ஆனையிறவு முகாமையும் இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள ஏனைய பகுதிகளையும் எந்த நேரத்திலும் விடுதலைப் புலிகள் தம்வசம் எடுத்துக் கொள்ளக்கூடிய நிலையிலேயே உள்ளனர்.

### ஐந்நூறு

(1-ம பக்கத்தொடர்ச்சி)

யார் வீடுகளிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசினால் வழங்கப்பட்ட இடம்பெயர்ந்தோர் மற்றும் தொழில் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணம் உட்பட உதவிகள் எதுவும் அற்ற நிலையில் இந்த அகதிகளில் பலர் வாழ்வதாகவும் அவர் கூறினார். (ரி)

### ஆசிரியர்களை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கள் கல்வி அமைச்சினால் மட்டுமே செய்யப்படுகின்றது. தொண்டர் ஆசிரியர்களின் நியமனங்கள் கூட கல்வி அமைச்சினாலேயே எவ்வித பாகுபாடுமின்றி வழங்கப்பட்டு வருகின்றது.

இதைவிடுத்து மாகாண சபைகள் ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்கு எதுவித அதிகாரமும் கிடையாது.

எதிர்காலத்தில் பாடசாலைகளில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் கூறினார். (வி]

### கேரதீவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து ஹெலிகொப்டரிலிருந்து 50 கலிபர் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

கேரதீவுப் பாதை ஏற்கனவே விமானத் தாக்குதல்களுக்கு இலக்கானது தெரிந்ததே. (வீ-க)

### அம்பாறை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஏற்பட்டதுடன் இராணுவத்தினரின் பல காவல் அரண்களையும், ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று அதிகாலை 12-30 மணியளவில் சின்னவத்தைக் குளம் இராணுவமுகாமுக்குப் 10-ம் கொலனி இராணுவ முகாமுக்குமிடையில் உள்ள 16ம் கொலனியிலுள்ள மினி முகாம்மீது விடுதலைப்புலிகள் திடீர்தாக்குதல்மேற்கொண்டதில் இராணுவத்தினர் இழப்புகளுடன் அருகிலிருந்த சின்னவத்தை கிராமத்துக்குள் ஓடி ஒழித்துக் கொண்டனராம்.

விடுதலைப்புலிகள் இம்முகாமிலிருந்து பெருமளவு ஆயுதங்களை கைப்பற்றினர். இம்மோதலில் விடுதலைப்புலிகள் தரப்பில் சங்கர் [மட்டுநகர்], ஆனந்தக்குமார் [மட்டுநகர்] ஆகிய இருபோராளிகள் வீரமரணமடைந்தனர்.

இதேவேளை புலிபாய்ந்தகல் இராணுவமுகாம் மீதும் புலிகளின் அதிரடித்தாக்குதலால் இப்பகுதிகளிலிருந்த ராணுவ அரண்கள் பல புலிகள் வசமாகியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மற்றும், அட்டவிலை முகாம் மீதும், வந்தாறுமூலை, மொறக்கொட்டாஞ்சேனை முகாம்கள் மீதும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் இடம்பெற்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன; (வி)

### பொன்னாலை

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைகள் குண்டு வீசப்பட்டது. இதில் ஒரு குண்டு வலந்தலைச் சந்தியிலிருந்து 6-வது பாலத்தில் வீழ்ந்து வெடித்து பெருமளவு சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏனையவையில் ஒரு குண்டு வலந்தலை தவறணைக்கு முன்பாக வீதியின் அருகில் வெடித்துப் பாரிய குழியையும், மற்றொரு குண்டு 4-ம் பாலத்திற்கு அருகில் வீழ்ந்து வெடித்து வீதியில் சிறு குழி ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது

ஏனைய ஐந்து குண்டுகளும் கடலினுள் வீழ்ந்து வெடித்துள்ளன. [சி-56]

### வெடிக்காத

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து குடத்தனைக்கு வந்து தஞ்சமடைந்துள்ள இளைஞர்களான பி. ஜெயக்குமார் (வயது 21), வி. பியதாசன் (வயது 22 என்ற இருவருமே இச் சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர்.

இவர்களுக்கு கைகளிலும் கண்ணிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன இவர்கள் தெய்வாதீனமாக மயிரிழையில் உயிர்தப்பியுள்ளனர். குடத்தனை மணற்பகுதியில் கிடந்த குண்டை எடுத்து வெடிக்கவைத்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. [52]

## மரண அறிவித்தல்

### யோசேப் பெஞ்சமின் (சின்னத்தம்பி)

சுண்டுக்குளி இல. 52, பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த யோசேப் பெஞ்சமின் (சின்னத்தம்பி) காலமானார். இவர் மாகிறேட்டின் அன்புக் கணவரும், யோ. பெ. தவம் ஜெயதீஸ் (பிரதேச சபை அச்சுவேலி-கோப்பாய்), அரியரட்டினம் (அரியம்), ஜோகராஜா திவ்வியம், கொன்ஸ்ரன் மனுஸ், செல்வநாயகம் ஜோய்ஸ், கென்ஸ்மன் ஜீவா, சந்திர சகேயர், செபம் ஆகியோரின் அன்புத் தந்தையும், போதகர் J. W. ஜோகராஜா, போதகர் A. செல்வநாயகம் (நுணுவில்), லீலா, ராஜினி ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னாரின் பூதவுடல் 52, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக சுண்டுக்குளி பரி. யோவான் சேமக்காலைக்கு இன்று (8-4-91) திங்கட்கிழமை மாலை 4-00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:

போதகர் J. W. ஜோகராஜா

(சி 4624)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number 3/108506/31.

## குப்பிளானில் இராணுவம் பின்வாங்கியது

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் இராணுவ முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற கடும் மோதலில், நிலைகுலைந்த இராணுவத்தினர் பாரிய இழப்புக்களுடன் மீண்டும் முகாமுக்குள் சென்றுவிட்டதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி மோதலில் புலிகள் தரப்பில் சுபன் (கணபதிப்பிள்ளை குலேந்திரராஜா -திருமலை), ஞானன் (மணியம் வீரசிங்கம்-மூதூர்) ஆகிய வீர வேங்கைகள் வீர மரணமடைந்தனர்;

வீர மரணமடைந்த வீர வேங்கைகளின் பூதவுடல்கள் இன்று சுண்டுக்குளி கொய்யாத்தோட்டம் சனசமூக நிலைய முன்றலில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மாலையில் கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு தீயுடன் சங்கமமாக்கப்படும்.

### ஆனையிறவு

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் வெளியேற முற்பட்ட இராணுவத்தினருடன் நடந்த மோதலில் காயமடைந்து நேற்று வீரமரணமடைந்த மைக்கல் [அன்ரனி ஜேசுதாசன் மிருசுவில் வடக்கு] விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவிக்கின்றனர்: (வி]

## கிழக்கில் இழப்புக்களுடன் ராணுவம்முகாம்திரும்பியது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் ஆனையடி வேம்படி, வாணுறு ஆகிய இராணுவ முகாம்களின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம கடும் தாக்குதலை மேற்கொண்டனர்,

விடுதலைப்புலிகளின் தாக்குதலைத் தொடர்ந்து பலத்த இழப்புகளுடன் இராணுவம் முகாம் திரும்பியுள்ளது. இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஈஸ்வரன் என்ற போராளி வீரமரணமடைந்தார்.

இதேவேளை நேற்றுக் காலை மட்டுநகரில் ஏற்பட்ட வெடிவிபத்தொன்றில் 2-வது லெப். மது வீரமரணமடைந்தார்.

விடுதலைப் புலிகள் இவருக்குத் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். [வி-க)

### காரைநகரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுப்பிரமணியம் வீதியில் 2 வீடுகளும், பழையகண்டியில் ஒரு வீடும், பத்தர்கேணியடியில் 2 வீடுகளும், ஆயிலியில் 3 வீடுகளும் பலத்த சேதமடைந்தன,

இதேவேளை, கடற்படை முகாமை அண்மித்த பகுதியான பலகாடு, கருங்காலி, களபூமியுள பல வீடுகள் முற்றுகச் சேதம் அடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது, (சி)

### மன்னாரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தும், பெண்களை பாலியல் வன்முறைக்குட்படுத்தியும், வீடுகளை எரித்தும், சூறையாடியும் வருவதாகக் கூறப்படுகின்றது

யேசுபாய்வா [வயது 26], அ. செபமாலை [வயது 52) சலரராஜன் குறூஸ் [வயது40] ஆகிய மூவரையும் இராணுவத்தினர்சுட்டுக்கொலைசெய்துவிட்டு, துண்டுதுண்டாக வெட்டிச்சாக்கில்போட்டு கிணற்றில் வீசியதாகவும், அருள்வாசம், திமிங்கு ஆகிய இருவரையும் இதுவரை காணவில்லையென்றும் கூறப்படுகின்றது.

நானாட்டான் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர், பொதுமக்களின் வீடுகளை எரித்தும், அவர்களின் நெல் மூடைகளைக் காவல் அரண்கள் அமைக்கப் பயன்படுத்துவதாகவும் தெரியவந்துள்ளது. (வி)

## கோவளம் கடலில் பீரங்கித் தாக்குதல்

[யாழ்ப்பாணம்)

காரைநகர் கோவளம் வெளிச்சவீட்டு முனையிலிருந்து நேற்று அதிகாலை பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இத்தாக்குதலில் மருதபுரம் பகுதியில் 3 வீடுகள் பலத்த சேதமடைந்ததுடன் ஆர். டி. எஸ். கட்டிடமும் சேதமடைந்துள்ளது.

மேலும் பலகாடு, கருங்காலி பகுதியை நோக்கியும் இப்பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டதில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன; (சி]

## 45 நோயாளர்களுக்கு கொழும்பு செல்ல அனுமதியில்லை

(யாழ்ப்பாணம்]

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து புறப்பட்ட 45 நோயாளருக்கு கொழும்பு செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் குமண பலில் இந்த நோயாளர்கள் கொழும்பு செல்ல விருந்தது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவை சங்கபிரதிநிதிகள் கொழும்பு இராணுவத் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டனர். இந்த நோயாளர்கள் கொழும்பு செல்ல அனுமதி மறுக்கப்பட்டது.

இன்றுவரை இவர்கள் செல்வதற்கு அரசினர் அனுமதியை எதிர்பார்த்து உள்ளனர். (56]